# தமிழ் அறிஞர்களும்  தமிழ்த் தொண்டும் - தமிழ்த்தொண்டு தேவநேயபாவாணர், அகரமுதலி , பாவலரேறு பெருஞ்சித்திரனார்

## தேவநேயபாவாணர்

**வாழ்க்கைக் குறிப்பு:**

ஊர் - புத்தூர் - திருநெல்வேலி மாவட்டம்
பெற்றோர் - ஞானமுத்து, பரிபூரணம் அம்மையார்

**சிறப்பு பெயர்:**

செந்தமிழ்ச் செல்வர்- தமிழக அரசு
செந்தமிழ் ஞாயிறு-பறம்புமலை பாரி விழாவினர்
மொழி ஞாயிறு-தென்மொழி இதழ்

**படைப்புகள்:**

இயற்றமிழ் இலக்கணம்(முதல் நூல்)
கட்டுரை வரைவியல் என்னும் உரைநடை இலக்கணம்
ஒப்பியல் மொழி நூல்
திராவிடத்தாய்
சொல்லாராய்ச்சிக் காட்டுரை
உயர்தரக் கட்டுரை இலக்கணம்
பழந்தமிழ் ஆட்சி
முதல் தாய்மொழி
தமிழ்நாட்டு விளையாட்டுக்கள்
தமிழர் திருமணம்
இசைத்தமிழ் கலம்பகம்
பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும்
தமிழ் வரலாறு
வடமொழி வரலாறு
தமிழர் வரலாறு
தமிழ் கடன் கொடுத்து தழைக்குமா?
இன்னிசைக்கோவை
திருக்குறள் தமிழ் மரபுரை
தமிழர் வேதம்
வேர்ச்சொல் கட்டுரைகள்
மண்ணில் வின் அல்லது வள்ளுவர் கூட்டுடைமை
தமிழ் இலக்கிய வரலாறு
செந்தமிழ்க் காஞ்சி(பாடல் தொகுப்பு)
இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?
மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்(இறுதி கட்டுரை)

**குறிப்பு:**

உலக முதல் மொழி தமிழ்; திராவிட மொழிகளின் தாய் மொழி தமிழ் என்ற இவர்தம் கொள்கையை நிலைநாட்ட வாழ்நாள் முழுவதும் முயன்றார்
உலகத் தமிழ் கழகம் தொடங்கினார்
மன்னிப்பு உருதுச் சொல்; பொறுத்துக்கொள்க என்பது தமிழ்ச் சொல் என்றவர்
தமிழை வடமொழி வல்லான்மையில் இருந்து மீட்கவே இறைவன் தன்னை படைத்ததாக கூறியவர்

**சிறப்பு:**

அறிஞர் அண்ணா - பாவாணர் தமிழ்மொழிக்கும் நாட்டுக்கும் இடைவிடாத நற்தொண்டாற்றி நம் அனைவரின் நிலையினையும் உயர்த்தியவர்,
அவருடைய புலமை தெளிவும் துணிவும் மிக்கது
மறைமலை அடிகளின் தனித்தமிழ்க் கொள்கையை நாடு முழுக்க பரப்பியவர்

## அகரமுதலி வரலாறு

**அகராதி:**

அகரம் + ஆதி -அகராதி
ஒரு மொழியில் உள்ள எல்லாச் சொர்களையும் அகரவரிசையில் அமையும்படி ஒருசேரத் தொகுத்து விளக்கும் நூலை அகராதி என்பர்.
அகராதி என்னும் சொல் தற்போது அகரமுதலி என வழங்கப்படுகிறது.

**நிகண்டுகள்:**

தமிழ் அகரமுதலி வரலாற்றில், செம்பாதி இடத்தைப்பெறும் சொற்பொருள் துறை நூல்கள் நிகண்டுகளாம்.
நிகண்டுகளில் பழமையானது - திவாகரர் எழுதிய சேந்தன் திவாகரம்.
நிகண்டுகளில் சிறப்பானது - மண்டலபுருடர் இயற்றிய சூடாமணி நிகண்டு.

**அகரமுதலி:**

திருமூலரின் திருமந்திரத்தில் “அகராதி” என்னும் சொல் முதன்முதலாக இடம் பெற்றுள்ளது.

**அகராதி நிகண்டு:**

நிகண்டுகளில் ஒன்றான “அகராதி நிகண்டில்” அகராதி என்ற சொல் அடைமொழியாக அமைந்துள்ளது.
இந்நூலே அகரமுதலிகள் தோன்றுவதற்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது.
இந்நூலில் சொற்களின் முதல் எழுத்துக்கள் மட்டுமே அகரவரிசையில் அமைந்திருந்தன.

**சதுரகராதி:**

வீரமாமுனிவரின் சதுரகராதியே தமிழில் தோன்றிய முதல் அகரமுதலி.
இது கி.பி.1732ஆம் ஆண்டு வெளிவந்தது.
சதுர் என்பதற்கு நான்கு என்று பொருள்.
பெயர், பொருள், தொகை, தொடை என நான்கு வகைகளில் தனித்தனியாக பொருள் விளக்கம் இருந்தது.
வீரமாமுனிவர் தமிழ்-இலத்தின் அகராதி, இலத்தின்-தமிழ் அகராதி, தமிழ்-பிரெஞ்சு அகராதி, பிரெஞ்சு-தமிழ் அகராதி, போர்த்துகீசிய-தமிழ்-பிரெஞ்சு அகராதி வெளியிட்டார்.

**சங்க அகராதி:**

“தமிழ்-தமிழ் அகராதி” ஒன்று லேவி-ஸ்பாடிஸ் என்பவரால் வெளியிடப்பட்டது.
யாழ்பாணம் கதிரைவேலனாரால் “தமிழ்ச்சொல் அகராதி” வெளியிடப்பட்டது. இதனை “சங்க அகராதி” எனவும் அழைப்பர்.
இதில் சொல்லின் மூலம் தருதல், மேற்கோள் அமைதல் எனும் மரபு பின்பற்றப்பட்டுள்ளது.

**பிற அகரமுதலிகள்:**

குப்புசாமி என்பவர் “தமிழ்ப் பேரகராதி” வெளியிட்டார்.
இராமநாதன் என்பவர் படங்களுடன் கூடிய ஓர் அகரமுதலியை வெளியிட்டார். இந்நூல் “இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் அகராதி” எனும் பெயருடன் வந்தது.
வின்சுலோ என்பவர் “தமிழ்-ஆங்கிலப் பேரகராதி” வெளியிட்டார்.

**பவானந்தர்:**

பவானந்தர் என்பார் 1925ஆம் ஆண்டு “தற்காலத் தமிழ்ச்சொல் அகராதியும்”, 1937ஆம் ஆண்டு “மதுரைத் தமிழ்ப் பேரகராதியும்” வெளியிட்டார்.

**சண்முகம்:**

மு.சண்முகம் என்பவரால் “தமிழ்-தமிழ் அகரமுதலி” 1985ஆம் ஆண்டு தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் மூலம் வெளியிடப்பட்டது

**தமிழ் லெக்சிகன்:**

இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்த மிகப்பெரிய அகரமுதலி “சென்னைப் பல்கலைக்கழக அகராதி”.
இது நன்கு திட்டமிட்டு முழுமையாக உருவாக்கப்பட்டது.
இவ்வகரமுதலி “தமிழ் லெக்சிகன்” என்னும் பெயரில் ஆறு தொகுதிகளாக வெளிவந்தது.

**செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி:**

1985ஆம் ஆண்டு “தேவநேயபாவாணர்”யின் “செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகரமுதலி”யின் முதல் தொகுதி வெளிவந்தது.
இரண்டாவது தொகுதி 1993ஆம் ஆண்டு வெளியானது.
ஒவ்வொரு சொல்லின் சொற்பிறப்பும், இனமொழிச் சொற்களுக்கான குறிப்பும், பதிப்பின் இறுதியில் தரப்பட்டுள்ளன.
படங்களுடன் வேலி வந்த இரண்டாவது அகரமுதலி இதுவேயாகும்.

**கணினி உதவியுடன் அகரமுதலி:**

முழுமையாக கணினி உதவியுடன் உருவாக்கப்பட்டு வெளிவந்த முதல் அகரமுதலி “கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி”.
விளக்கச் சொற்களோடு வெளிவந்த முதல் அகரமுதலி இதுவே.

**கலைக்களஞ்சியம்:**

தமிழ்க் கலைக்களஞ்சியங்களின் முன்னோடி - அபிதான கோசம்.
இது 1902ஆம் ஆண்டு இலக்கியப் புராண இதிகாசச் செய்திகளைக்கொண்டு வெளிவந்தது.
இது இலக்கியக் களஞ்சியம் ஆக திகழ்கிறது.

**அபிதான சிந்தாமணி:**

1934ஆம் ஆண்டு இலக்கியச் செய்திகளோடு, அறிவியல் துறைப் போருகளையும் முதன் முதலாகச் சேர்த்து விளக்கம் தந்து வெளிவந்தது - அபிதான சிந்தாமணி.
இதனை சிங்காரவேலனார் தொகுத்து வெளியிட்டார்.

**தமிழ் வளர்ச்சி கழகம்:**

தமிழ் வளர்ச்சி கழகம் முறையான “முதல் கலைக்களஞ்சியத்தை” தொகுத்து வெளியிட்டது.
இது பத்து தொகுதிகளை உடையது.
இக்கழகம் குழந்தைகள் கலைக்களஞ்சியம், நாடகக் கலைக்களஞ்சியம், இசுலாமிய கலைக்களஞ்சியம் முதலிய பல கலைக்களஞ்சியங்களை வெளியிட்டது.

**கலைச்சொல் அகரமுதலி:**

காலைக்கதிர் நிறுவன முயற்சியால் பொதுஅறிவு, உளவியல், புவியியல், புள்ளியல், வரலாறு, வானவியல் முதலிய துறைகளுக்கும் கலைச்சொல் அகரமுதலிகள் 1960ஆம் ஆண்டு தொகுக்கக்ப்பட்டன.
மணவை முஸ்தபா அறிவியல் சார்ந்த துறைவாரியான கலைச்சொல் அகரமுதலிகளைத் தொகுத்து வெளியிட்டார்.
அறிவியல் கலைச்சொல் களஞ்சியம் 1991ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

## பாவலரேறு பெருஞ்சித்திரனார்

**வாழ்க்கை குறிப்பு:**

இயற் பெயர் - துரை மாணிக்கம்
ஊர் - சேலம் மாவட்டம் சமுத்திரம்
பெற்றோர் - துரைசாமி, குஞ்சம்மாள்

**சிறப்பு பெயர்:**

பாவலரேறு
தற்கால நக்கீரர்

**படைப்பு:**

கொய்யாக்கனி
ஐயை
பாவியக் கொத்து
எண்சுவை எண்பது
மகபுகுவஞ்சி
அறுபருவத்திருக்கூத்து
கனிச்சாறு
நூறாசிரியம்
கற்பனை ஊற்று
உலகியல் நூறு பள்ளிப்பறவைகள்

**இதழ்:**

தென்மொழி
தமிழ்ச் சிட்டு
தமிழ் நிலம்

**குறிப்பு:**

உலக தமிழ் முன்னேற்ற கலகத்தை தொடங்கினார்
மொழி ஞாயிறு தேவநேயபாவாணரின் கொள்கைகளைப் பரப்பும் தலை மாணாக்கர்